முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.04.2024**, வெள்ளிக்கிழமை

1. அவதார வள்ளலே அரங்கா
அறமாக வாழும் தேசிகா
அவனி காக்க வந்த ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா குரோதி தகர்திங்கள்
இருமூன்று திகதி புகரோன் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 06 ம் நாள், 19.04.2024, வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் விசுவாமித்திரர் யானும்
3. யானும் உலகநலம்பெற வேண்டி
உரைப்பேன் அரங்கன் கேட்க
ஞானவான்களாக மக்கள்தேற
ஞானிகள் பேரிலான பூசை நடத்தும்
4. நடத்தும் அரங்கன் முழுமதிகால
ஞான பூசை மக்கள் கலந்துவர
இடர்களை எல்லாம் வென்று
எப்படித் தேறுவோமெனும் தெளிவு
5. தெளிவு ஞானத் திடம் கூடி
தீர்வு காணும் வல்லமையோடு
அழியாமை எனும் சக்தி தரும்
ஆற்றலாக அரங்கன் ஆசி கூடி
6. ஆசி கூடியே கலியுக மக்களெல்லாம்
அற்புதம்பல கண்டுத் தேறுவர்
வாசிவென்ற ஞானிகள் பலம்
வரமாக மக்களிடை கூடிட
7. கூடிட கலியின் கொடுமைகளை
குறைகளை குற்றமான தலைமைகளை
நாடெங்கிலும் இனிதொடரா விரட்டும்
நல்ல தலைமைதனை உருவாக்கும்

8. உருவாக்கும் சக்தி மிக்கவர்களாக
உயர்ந்து நன்கு உலகினில்
குருவருள் துணை பெருகிட
குவலயத்திற்கே மாற்றம் தருவர்

9. தருகவே தலைமையை மாற்றி
தரணிக்கு புதுமை தருகின்ற
தருகின்ற அரசியல் களம்சார்ந்த
தக்க தேர்தல் வாக்களிப்பின் உரிமை

10. உரிமை உணர்வுத் தெளிவு
உணர்ந்து ஞானவான்களை
தெரிவு செய்யும் அறிவு விழிப்புணர்வு
தேறிட அரங்கன் வழிகாட்டலால்

11. வழிகாட்டலால் மக்களிடை இனி
வருங்காலம் ஞானத் தீர்வாக
அழியாமை பெற்றவர்களின் ஆளுமையாக
அகிலம் கண்டடைய நேரும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—